ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராயநம:

# ஆர்ய தர்மம்.

**कस्त्वं कोऽहं कुत आयातः का मे जननी को मे तातः ।**
**इति परिभावय सर्वमसारं विश्वं त्यक्त्वा स्वप्नविचारम् ॥**

त्वं - நீ
कः - யார்
अहं - நான்
कः - யார்
कुतः - எங்கிருந்தும்
आयातः - வந்தவன்
मे - என்னுடைய
जननी - தாயார்
का - யார்
मे - என்னுடைய
तातः - தகப்பனார்
कः - யார்
इति - என்று
स्वप्नविचारं - ஸ்வப்பனத்தில் செய்யும் விசாரம் போலிருக்கின்ற
सर्व - ஸமஸ்தமான
विश्वं - லோகத்தையும்
असारं - பயனற்றதாக
परिभावय - நன்றாய் ஞாபகத்தில் வைத்துக்கொள்.

அக்ஞானத்தின் வலிமையால் இப்பியில் வெள்ளிபோலும், பாலைவனத்தில் ஜலம் போலும் தோன்றும் அஸத்தியமான இந்தப் பிரபஞ்சத்தையும், அதிலுள்ள ஆபாஸமான விஷயங்களையும் ஸத்யமாக நினைத்து நம் ஜன்மாவை வீண் பண்ணாமல், உண்மைப் பொருளையறிந்து நித்யமான சுகத்தைப் பெற முயற்சி செய்ய வேண்டுமென்று அறிவிக்கிறார்.

நீ என்றும் நானென்றும் அடிக்கடி பலராலும் வியவகரிக்கப்படும் வஸ்து எது? ஸ்தூல சரீரமா? இந்திரியங்களா? மனமா அல்லது இவைகளுக்குப் புறம்பான வேறு வஸ்துவா? என்பதை கவனித்தறியவேண்டும. பின்னும் அது எங்கிருந்து வந்தது. என்னுடைய தாயார், என்னுடைய தகப்பன் என்று கூறப்படுகிறவர்கள் எவர்கள், அவர்களுக்கும் உங்களுக்கும் யாது ஸம்பந்தம், ஸ்வப்நத்தில் அனுபவிக்கும் ராஜ்யவிசாரம் போல் பிரயோஜனமற்றதான இப்பிரபஞ்சம் பூராவையும் அற்பங்கூட உபயோகமற்றதென்று தள்ளிவிட்டு நித்யானந்த ஸ்வரூபமான ஸ்தானத்தையடைந்து சுகித்திருக்கவேண்டித் தங்களாலியன்ற வரையில் அவரவர்களும் பிரயத்தனம் செய்யவேண்டியது முக்கியம்.

உபபத்திராதிபர்.

## சிரத்தானந்தர்கூறிய விதவாவிவாகத்திற்குக்கண்டனம்.

(௫௰௨-வது பக்கத்தொடர்ச்சி.)

விவாகமென்பது தர்மானுஷ்டானத்திற்காக ஏற்பட்டதே யன்றி கேவலம் போகத்திற்காக சாஸ்திரத்தில் விவாகத்தை விதிக்கவில்லை.

आहूय दानं कन्यायाः ब्राह्मो धर्मः प्रकीर्तितः ।
सहोभौ चरतं धर्ममिति वाचान्युभाष्य तु ॥
कन्याप्रदानमभ्यर्च्य प्राजापत्यो विधिः स्मृतः ।

கிருகஸ்தாசிரமத்தையடைந்த பிறகு அதில் செய்யவேண்டிய தர்மானுஷ்டானத்திற்காகஏற்படுவதால் விவாகத்தைத் தர்மமென்றும், விவாக காலத்திலேயே கன்னிகையின் பிதா வரனைப் பார்த்து, நீங்களிருவரும் சேர்ந்து வைதிக தர்ம்மங்களை அனுஷ்டியுங்கள் என்று முந்தியே வரனிடம் தெரிவித்துப் பூஜித்துக் கன்னிகையைக் கொடுப்பது பிராஜாபத்யமென்கிற விவாகமென்றும், வைத்தியநாத தீக்ஷிதியத்தில் மனு வசனம் கூறுகின்றது. இதற்கிணங்கவே ஸ்ரீமத் ராமயணத்திலும்

इयं सीता मम सुता सहधर्मचरी तव ॥

இவள் தான் என்னுடைய புத்திரியான ஸீதை உன்னோடு கூட எந்தத் தர்ம்மத்தையும் நன்கு அனுஷ்டிப்பவள். ஆகையால் இவளை கிருகித்துக் கொள் என்று ஜனகர் ஸ்ரீ ராம மூர்த்தியிடம் கூறுகிறார். ஆகையால் விவாகமென்பது தர்ம்மார்த்தமேயன்றி

போகத்திற்காக மாத்திரமல்லவென்று நிச்சயம். அர்ஜுனனால் செய்யப்பட்டது இவ்விதவிவாகமேயல்ல ஆகையால் காமவசானுக:— ஜக்ராஹ என்கிற இருபதங்களையும் பிரயோகித்திருக்கிறார். காமவாசானுக என்கிற பதத்தால் அர்ஜுனன் போகத்தில் விருப்பங்கொண்டு, தர்ம்மாதர்ம்ம வியஸ்தைகளிலிருந்தும் மாறி, காமனுக்கு ஸ்வாதீனனாக இருந்துகொண்டு ஸ்வபுத்தியில்லாமல் விதிக்குமாறுதலாக 'அவளை ஜக்ராஹ போகார்த்தம் அங்கீகரித்தானேதவிர தனக்குற்ற வைதிக முறைப்படி தர்மானுஷ்டானத்திற்காக அவளை விவாகம் செய்யவில்லை என்று காமவசானுக ஜக்ராஹ என்கிற இரண்டுபதங்களாலும்ஸ்பஷ்டமாய்த்தெரிகின்றது.

ஆகையால் மேல் வாக்கியத்திலும், **परक्षेत्रेऽर्जुनात्मजः** பிறனுடைய க்ஷேத்திரத்தில் அர்ஜுனனுக்குப் புத்திரன் உண்டானான் என்று சொல்லப்பட்டிருக்கின்றது உசிதமாகிறது. அர்ஜுனன் விதிப்படி விவாகம் செய்து அந்த நாககன்னிகையை கிரகித்திருப்பானாகில் அவள் இவனுடைய பத்நீ ஆய்விட்டபடியால் அவளைப் பரக்ஷேத்திரமென்று கூறுவது மிகவும் தவறேயாகும், அவ்விதம் கூறியிருப்பதால் இவள் முதலில் விவாகம் செய்தவனுக்குத்தான் பத்நி அவனுடைய க்ஷேத்திரம்தான் பிறகு மற்றொருவனைப்பதியாக அடைய இவளுக்கு அதிகாரமில்லை. சாஸ்திரமும் கிடையாது ராகத்தால் போகத்தில் ஆசைகொண்டு அர்ஜுனன் இவளைக்கிரகித்தாலும்அவளும் நாம் விதவை,மறுபதியையடைய அதிகாரமில்லை என்று கருதாமல் அவனுடன் போகத்திற்கிணங்கினாலும், அவனுக்கு பார்யையல்ல முன் கிரகித்தவனுடைய பார்யைதான் இவளிடத்தில் அர்ஜுனனுக்கு ஏற்பட்ட புத்திரன் பிறனுடைய ஸ்திரீயினிடத்தில் சாஸ்திர விரோதமாய் ஏற்பட்டவன் தான் என்பதை நன்கு வெளியிடவேண்டியே "பரக்ஷேத்திரே, என்று மகானான வியாஸபகவான் ஸ்பஷ்டமாய் வெளியிட்டிருக்கிறார். அர்ஜுனன் கேவலம் போகார்த்தம் அசாஸ்திரீயமாய் இவளைக் கிரகித்துக்கொண்டான் என்பதையும் அறிவிக்கவேண்டியே, முதல் விவாகத்தில் ஐராவதன் என்கிற மஹாத்மாவினால் முறைப்படி தானம்செய்து கொடுக்கப்பட்டாள் என்று சொல்லிவிட்டு இங்கு வந்தவுடன் காமவசனான அர்ஜுனன் அவளைக் கிரகித்துக் கொண்டான் என்று சொல்லியிருக்கிறார். இதினால், ஒருவரும் அவளை நியமப்படி விவாகம் செய்து கொடுக்கவில்லை என்று

நிச்சயமாய்த்தெரிகின்றது. உலகில் லௌகிகத்திலும், ஒருவன் தன் நிலத்தைப் பிறனுக்குக் கிரயத்திற்கோ, அல்லது, தானமாகவோ சாஸநம் செய்து கொடுத்து ரிஜிஸ்த்ருமாய்த் தீர்ந்தபிறகு கொஞ்சகாலம் சென்று அந்த நிலத்தை வாங்கினவன் இறந்துவிட்டால், முந்திசாஸனம் செய்தவன் அந்த நிலத்தை மறுபடியும், வேறொருவனுக்கு சாஸனம்செய்ய முடியுமா? செய்தால் தான்செல்லுமா முதல்தடவை சாஸனம் செய்தவுடன் இவனுடைய ஸொத்தென்கிற பாத்யம்எப்படி இவனைவிட்டுப் பூரூவும் விலகிவிடுகின்றதோ அவ்விதம் தன் ஸொத்தாயிருந்த கன்னிகையை வைதிக மந்திரங்களைக்கொண்டு சாஸ்திர விதிப்படி ஒரு வரனுக்கு தானம் செய்து கொடுத்துவிட்டால் உடனே இவனுடைய ஸொத்து என்கிறபாத்தியம் போய் பதியின்ஸொத்தாகிவிடுகின்றது. அன்யனுடைய ஸொத்தை மறுபடியும், அவன் இறந்து விட்டதினால் இவன் தன்னுடையதாக பாவித்துத்தானம்செய்ய எப்படி பாத்தியம் ஏற்படும் பிறருடைய ஸொத்தை ஒருவன் தன்னுதாகக்கருதித்தானம்செய்து கொடுத்தாலும், அவனுக்குக் கொடுக்கலாமென்று ஒருவன் போதித்தாலும் இவர்களைக்காட்டிலும் அயோக்கியர்கள் வேறு உண்டோ? இவ்விதக்கெட்ட காரியத்தை உலகில் யாராவது செய்தால் கவர்ன்மெண்டார் அதை உடனே விசாரித்துத்தகுந்த சிக்ஷைசெய்கிறார்கள். சாஸ்திரமென்கிற சட்டத்திற்கு விரோதமான விதவாவிவாஹமென்கிற கெட்ட காரியத்தை ஒருவன் செய்தாலும், செய்யச்சொன்னாலும் இவர்களையும், சிக்ஷிக்கவேண்டிய கடமை அரசாங்கத்தாருக்கும் உண்டு. இவர்கள் அதை கவனியாமலிருந்தாலும் ஈசுவரனால் ஏற்படுத்தப்பட்டிருக்கிற இயமன் அவசியம் கவனித்துத் தகுந்த சிக்ஷைசெய்வானென்பதில் சந்தேகமேயில்லை.

இவ்விதக் கெட்டகாரியத்தை அர்ஜுனன் எப்படிச்செய்தான் என்று சங்கிப்பதும் சரியல்ல. விசேஷசக்தியுள்ளவர்களாயிருப்பின் ஒரு ஸமயம் தர்மவிருத்தமான காரியத்தைச் செய்யலாம். அதை திருஷ்டாந்தமாகக்கொண்டு நாமும் செய்யத்துணிவது கூடாது. அது தர்மமாகவும் ஆகமாட்டாது.

धर्मव्यतिक्रमो दृष्टो महतां साहसं च तत् ।
तदन्वीक्ष्य प्रयुञ्जानस्संसीदत्यवरोऽबलः ॥

தர்மவிரோதமான கார்யத்தைமஹான்களாயிருப்பவர்கள் தமக்கு சக்தியிருக்கிறதென்கிற ஸாஹஸத்தால்செய்திருக்கிறார்கள் அதைப் பார்த்து ஒருவிதசக்தியுமில்லாத துர்பலனாயிருக்கும் மற்றொருவர் அவ்விதம் அனுஷ்டித்தல்கூடாது. அவ்விதமனுஷ்டித்தால். கொடிய கஷ்டத்தையடைவான் என்று மனு சொல்லியிருக்கிறார். பரசுராமர் மாதாவைவதம் செய்தார். திரௌபதி ஐந்துபுருஷர்களைப்பதியாக வரித்தாள். என்கிறஇவைபோன்றவைகளை நாம் கவனிக்கக்கூடாது. நமக்குற்ற விதியைமாத்திரம்தழுவித் தர்மானுஷ்டானத்தைச்செய்ய வேண்டும்.

(தொடரும்)

உபபத்திராதிபர்.

---

# சிவபூஜையின் மகிமை.

(ருஉவு-பக்கத் தொடர்ச்சி)

என்று உள்ளங்குழைந்து தோத்திரம் பல செய்து, எனக்கு ஜராமரணவர்ஜிதமான சரீரத்தைக் கொடுத்தருளவேண்டுமென்று ஈசுவரனை வேண்டிக்கொண்டான். ஈசுவரனும் அவனது வேண்டுகோளுக்கிசைந்து அவனுக்கு நரை கிழத்தனம் முதலியவை என்றும் உண்டாகாமல் சுகமாய் வாழக்கடவது என்று சொல்லி அநுக்கிரஹித்து அந்தர்த்தானமானார்.

விச்வஜித்து இம்மாதிரியான அநுக்கிரகத்தைப் பெற்றுக் கொஞ்சகாலம் கழித்தான். தனக்கு ஈசுவரானுக்கிரகம் கிடைத்துவிட்டது. தன்னைக்கேட்பாரில்லையென்று தானே நினைத்து தன் மனம் போனபடியெல்லாம் காரியங்கள் செய்யலாயினான். மதம் மிகக்கொண்ட இந்த விசுவஜித்து என்னுமரசன் தன் ராஜ்யத்திலுள்ள பதிவிரதா தர்ம மிகுந்த ஸ்திரீகள் பலரையும் வலுவிற்போய்க்கெடுக்க ஆரம்பித்தான். இவன் இப்படித்தன் ராஜ்யத்தில் புகுந்து செய்யும் அதிக்கிரமத்தைப் புகுந்து கண்டிக்க யமதர்ம ராஜனுக்கும் சக்தியில்லாதிருந்தது. ஆகவே யமதர்ம

ராஜன் இவன் செய்து வந்த அக்கிரமச் செயல்களைப் பரமேசுவர னுக்கு அறிவித்தான். பரமேசுவரனும் இவ்வாறு அக்கிரமஞ் செய்யும் விசுவஜித் என்னும் அரசனைத் தம் சமூகம் வரவழைத் தார். உலகவர்த்தகமான ஸ்திரீகளைப் புகுந்து கெடுத்தல் அரச னுக்கடுத்த காரியமில்லை யென்று அந்த விசுவஜித்தை எதிரில் கடிந்து மொழிந்து கண்டித்தார். கொடிய பாபமான காரியம் செய்த விசுவஜித்து ஆமையாய் மாறும்படி பரமேசுவரன் அவ னுக்குச் சாபமும் கொடுத்தார்,

இச்சாபம் பெற்ற விசுவஜித் என்பவன் தான் செய்த காரி யத்திற்காகப் பச்சாத்தாபப்பட்டுத் தன்னை மிகுதியும் மன்னித்து அநுக்கிரகிக்கும்படி ஈசுவரனை ஸ்தோத்திரம் செய்து கேட்டுக் கொண்டான். அப்போது ஈசுவரன் இந்திரத்யும்னன் என்னும் அரசனுக்கு வாக்கு ஸகாயம செய்வதற்கு முன் 60 கல்பகாலம் ஆமையாகவே இருந்து வசித்துப் பின் நல்லுலகம் அடைவாய் என்று சாபவிமோசனம் செய்தனுக்கிரகித்தார்.

ஈசுவரன் கொடுத்த சாபப்படி விசுவஜித்து என்னும் அர சன் 100யோசனைநீளமும்100யோசனை அகலமுமுள்ள ஆமையாய்ச் சமுத்திரத்தில் மாறினன். இந்த ஆமையை காம்பிலயம் என் னும் நகரத்திலுள்ள இந்திரத்யும்னன் என்னும் அரசன் சரி யான வலையைப் போட்டு இதனைப் பிடிக்குமாறு வலைஞர்களுக்கு அவன் கட்டளையிட்டான். அவர்கள் இப்பெரிய ஆமையைப் பிடித்துக் கொணரலும் கல்ப ஸூத்திர விதிப்படி பூமியில் இப் பெரிய ஆமையை பரப்பி வைத்தார்கள். அதன் மேல் அநேக சயனங்கள் ஏற்படுத்தி இஷ்டகைகள் பரப்பினர்கள். அதன் மேல் அக்நியை மூட்டி ஓயாமல் எண்ணிறந்த யாகங்களை இந்திரத் யும்னன் என்னும் மன்னன் செய்தான்.

அப்படிச் செய்த யாகங்களில் மூட்டிய அக்கினியின் சூடு தாங்கமாட்டாமல், திரவரூபமாக மாறி, மஹீ என்னும் நதி யாகப் பெருக்கெடுத்துப் பிரவாகமாக ஓடி மேலைச் சமுத்திரத் தில் சங்கமமாயிற்று. இப்படி ஓடிச் சங்கமமான இந்த இடத்

தைபே மஹீஸாகர் ஸங்கமஸ் தானம் என்று நாளது வரையில் பெயரிட்டழைக்கிறார்கள்.

இப்படிக் கணக்கு வழக்கில்லாத யாகம் செய்த இந்திரத்யு மனன் என்னும் மன்னன் யாகம்செய்ததன்பலனுகப் பிரமலோகம் சென்றான். அம்மன்னன் பிரமலோகம் போன பிறகுநைமித்தி கப் பிரளயத்தில் சுமார் 56 கல்பங்கள் கழிந்தன. அதன் பிறகு அந்த ஆமை, பூமி திரவமாய் மாறின மஹீநதியின் ஜலத்திலே யே மெதுவாக ஊர்ந்து போய் மானஸஸரஸில் தங்கியது.

இந்திரத்யும்னன் யாககாலத்தில் அக்னியினல் ஆமையின் முதுகில் உண்டான இரணங்கள் 60 கல்பமாயும் ஆறுமலிருந்தது. இவ்வாமைக்கும் கணக்குவழக்கில்லாத கல்பகாலங்கள் வசித்துகோ ட்டான் கழுகுமுதலானவற்றிற்கும் இணைப்பிரியாச்சிநேகமுண்டு. இவ்வாமையினிடம் இந்திரத்யுமனனை மார்க்கண்டேயர் அழைத் துப் போனர். அப்போது மானஸ ஸ ர ஸி ன் கரையில் படுத் திருந்த ஆமை இந்திரத்யுமனனைக் கண்டமாத்திரத்தில் 'எங்கு மறுபடியும் இவன் நம்மை யாகத்தினடியில் பிடித்துப்போட வரு கிறானே என்று நினைத்துப் பயந்து ஜலத்திற்குள்ளோடியது. மார்க்கண்டேயரும் ஆமைக்கிருக்கும் பயத்தைத தன்ப்ரியவசனங் களாற் போக்கி, அதனைக் கரைக்கு வரச்செய்து, அதன் வாக்கு சகாயத்தையும் இந்திரத்யும்னனைப் பெறச்செய்தார் என்று ஸ்ரீ ஸ்கந்தமஹாபுராணம் மஹேசுர கண்டம் குமாரிகா கண்டம் கூறும். இந்திரத்யும்னனுக்கு வாக்குச் சகாயம் பெற்ற ஆமை யும் திவ்யதேகம் பெற்று ஈசுவரனுடனும் இரண்டறக் கலந்தது. ஆகவே சிவபூஜை செய்தலினுல் பெறும் பேறும் மிகவும் அதிக மென்பது இதினுலறியப்படுகின்றது.

பண்டித V. சுப்பிரமணிய அய்யர்.

## ப்ரஹ்லாத சரித்திர சாரம்.

பகவத் பக்தர்களில் பிரஹ்லாதன் தான் முதன்மை பெற்ற வன். ஆகையால் கிருஷ்ணபகவான் கீதையில் தன் விபூதி ரூபங்

களைச் சொல்லுங்கால் प्रह्लादश्चास्मि दैत्यानां "அஸுரர்களுக்கிடை பிரஹ்லாதனிடம் என்னுடைய ஸாந்நித்யம் அதிகம்" என்று கூறி யுள்ளார். பரமபாகவதர்களின் ஜாப்தாவைச் சொல்லுங்காலும் நாரதர் முதலியோரைக் காட்டிலும்கூட பிரஹ்லாதன் உத்தமன் என்பதை அறிவிக்கவேண்டி அவன் நாமத்தையே முதலில் கிரஹித்திருக்கிறார்.

प्रह्लादनारदपराशरपुण्डरीकव्यासांबरीष शुकशौनक भीष्मकाद्याः ॥

பிரஹ்மசூத்திரம் மூன்றும் அத்தியாயம் நான்காம்பாதத்தில்அஸுரஜாதிக்குத்தான் அஸுரபாவம், தேவஜாதிக்குத்தான் தேவத்தன்மை, என்று நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது, அஸுரஜாதியிற்பிறந்த பிரஹ்லாதனுக்கு மாத்திரம் பகவானிடம் பக்திபடைத்த தெய்வத்தன்மை எங்ஙனம் தகும்? என்றால் அத்யாத்மபுராணத்தில்.

देवाः शापाभिभूतत्वात्प्रह्लादाद्या बभूविरे ।
अतः सुगतिरेतेषां नान्यथा व्यत्ययो भवेत् ॥

"தேவர்களே சாபம் முதலியவைகளால் பீடிக்கப்பட்டு பிரஹ்லாதன் முதலியோராகப் பிறந்திருக்கின்றனர். ஆகையால் ஸ்வபாவத்தினால் பிரஹ்லாதன் தேவனே அதனால் அவனுக்கு உத்தமமான மோக்ஷம் கிடைத்தது. எப்போதும் அஸுரன் அஸுரன்தான் தேவன தேவன்தான் என்னும் நியாயத்திற்கு மாறுபாடில்லை" என்றும், கீதாதாதபர்யத்தில்,

देवाः शापबलादेव प्रह्लादादित्वमागताः ।
अतः पुनश्च देवत्वं ते यान्ति निजमेव तु ॥

"தேவர்கள் சாபத்தின் வன்மையினால்தான் பிரஹ்லாதன் முதலியோராகப் பிறந்தனர். அதை அநுபவித்த பிறகு அவர்கள்இயற்கையான தேவரூபத்தை அடைகின்றனர்" என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இன்னும் பல சுருதிகளாலும் பிரஹ்மஸூத்திரத்தில் நிர்ணயம் செய்யப்பட்டது சரியே என்பது தெளிவு.

இது நிற்க, பிரஹ்லாதன் பூர்வத்தில் ஓர்தேவனாகவிருந்தான். ஏதோ சாபத்தால் அஸுரனாகப்பிறந்தான் என்று ஷி வசனங்களினால் தெரியவருவதால் பிரஹ்லாதனின் பூர்வஜன்மம் யாது?

எந்த தேவனாகவிருந்தான்? யாருடைய சாபத்தால் அஸுரனானான்? அச்சாபம் பிறக்கக் காரணம் யாது? சாபத்திற்கு ஆளாகியும் பகவத்பக்தி மாத்திரம் அவனிடம் எப்படிக்குடிகொண்டிருந்தது? என்ற பல வினாக்களுக்கு விடைகளைப் பகரவேண்டியதவசியமாயிற்று. ஆதலின் அடியிற்கண்டவாறு ஷை வினாக்களுக்கு விடைகளை யளிப்போம்.

ஸ்ரீமத் பாகவதம் ஸப்தமஸ்கந்தத்தில் பிரஹ்லாத சரித்திரம் அதிவிஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருப்பினும் அவன் பூர்வஜன்ம விருத்தாந்தங்கள் அங்கு கூறப்படவில்லை, ஏனெனின். ஸ்காந்த புராணத்தின் ஓர்பாகமாகிய ஸிம்ஹாசலமஹாத்மியத்தில்ஷை விஷயங்கள்யாவும் கூறப்பட்டிருப்பதனால்தான். அவ்விபரம் பின்வருமாறு.

ஸிம்ஹாசல மாகாத்மியம் எட்டாம் அத்தியாயம்:—

ஹிரண்யகசிபுவின் உபத்திரவங்களைச் சகியாத பிரஹ்மா முதலிய தேவர்கள் அஸுரசத்ருவான விஷ்ணுவிடம் முறையிடுவதற்கு வைகுண்டமடைந்தனர். அங்கு வாயிற்காப்போனாகவிருந்த ஸுமுகன் அத்தேவர்களைப்பார்த்து "யோகிகளினால் அடையத்தகுந்த பகவானின் ஸ்தானத்தை கர்மாதிகாரிகளான நீங்கள் அடையத்தகுந்தவர்களல்ல, வந்த காரியத்தைத் தெரிவித்தால் நானே பகவானிடம் தெரிவிக்கிறேன்" என்று தடை செய்தான். மிகவும் துக்கமுற்ற தேவர்களும் அப்படியே செய்ய, துவாரபாலகனால் அறிவிக்கப்பட்ட பகவானும் முன்தோன்றி தேவர்கள் வந்த காரணத்தை வினவினார்.

பத்தாம் அத்தியாயம்:— "பகவன்! ஹிரண்யகசிபுவால் நாங்கள் மிகவும் பீடிக்கப்படுகிறோம். அதை இச்சந்நிதானத்தில் தெரிவிக்க வந்தவர்களை இத்துவாரபாலகன் உள்ளே போக முடியாமல் தடுத்துவிட்டான். இந்த இடத்தில் இது வரையில் இப்பேர்ப்பட்டதடை ஏற்பட்டதுமில்லை, நாங்களும் இப்பேர்ப்பட்ட துக்கத்தை அநுபவித்தது மில்லை." என்று தேவர்கள் கூறினார்கள். கிருபா சமுத்திரரான கடவுள் "நீங்கள் போய்

வரலாம். நாம் கூடிய சீக்கிரமே புவியில் அவதரித்து லோக கண்டகனுன அவ்வரக்கனைச் சம்கரிப்போம், உங்களைத் தடுத்த ஸுமுகனே அவன் சம்ஹாரத்திற்குக் காரணமாவான்," என அருள் புரிந்தனர். அவர்கள் சென்றவுடன் ஸுமுகனைப்பகவான் கூப்பிட்டு "துர்ப்புத்திபடைத்தவனே! நீ தேவர்களைத் தடுத்த படியால் அஸுரயோனியையடைந்து அதே ஹிரண்யகசிபுவுக் குப் புத்திரனுகக்கடவாய்" என்று கட்டளையிட்டனர்.

பதினேழும் அத்தியாயம்:—இவ்வாறு சபிக்கப்பட்ட ஸுமுகன் அஞ்ஜலிபந்தஞ்செய்து விக்ஞாபித்துக் கொண்டதாவது "ஈசா! தங்களுக்கு வாயிற்காப்போனுகவிருந்து நான் அஸுரனு கப்பிறப்பதா? யான் செய்த தவறை க்ஷமிக்கக்கடவீர்." என்று. பகவானே "குழந்தாய்! பயப்படாதே. ஒரு ரகஸ்யத்தைச்சொல் லுகிறேன் கேள். உலகில் என்னிடம் பக்திபுரிய ஜாதி காரணமா காது. நீ அஸுரனுக்குப் புத்திரனுயினும் என் திவ்யநாமங்களை ஸதாஜபித்துக்கொண்டும் என் திவ்யரூபங்களைத்தியானம் செய்து கொண்டும்இருந்துகடைசியில் என் துவாரபாலகனுவாய்" என்ருர்.

பன்னிரண்டாவது அத்தியாயம்:—பிறகு ஸுமுகன் ஹிரண் யகசிபுவின் புத்திரனுகப்பிறந்தான். தைத்ய புரோஹிதர்களும் எல்லாரையும் சந்தோஷிக்கச்செய்யும் அக்குமாரனுக்கு பிர்ஹ்லா தன் என நாமகரணம் செய்தனர். இதனுல் பிரஹ்லாதன் பூர்வம் விஷ்ணுலோகத்தில் ஸுமுகன் எனப்பெயர்கொண்ட துவாரபால கனுக விருந்தானென்றும்மகாவிஷ்ணுவின் சாபவசத்தினுல்அஸு ரனுனன் என்றும் அச்சாபம், பிரஹ்மாதி தேவர்களைத்தடுத்தபடி யால் ஏற்பட்டது என்றும் மீண்டும் ஸுமுகனுல் பிரார்த்திக்கப் பட்ட பகவான், அவன், அஸுரனுய்ப்பிறந்தாலும் அவனிடம் பகவத்பக்தி பூர்ணமாயிருக்கும் என்று அநுக்ரஹம் செய்தபடி யால் அவன் பரமபாகவதனுனன் என்றும் தெரியவருகிறது.

பதினெட்டாம் அத்தியாயம்:—ஸிம்ஹாசலம் என்னும் க்ஷே த்திரம் விசாகப்பட்டணத்திற்கு அருகில் ஜகந்நாதத்திற்குப்போ கும் வழியில் உளது. அங்கு வராஹநரஸிம்மஸ்வாமி, கோயில் கொண்டிருக்கிருர். ஸிம்ஹாசலம் என்று பெயர்வரக் காரண மென்ன? ஒருநாள் ஹிரண்யகசிபு பிரஹ்லாதனை ஸமுத்திரத்தில் தள்ளி அவன்மேல் பெரிய பர்வதத்தைப் போடும்படி ஏவினுன்,

அவ்வாறு தள்ளப்பட்ட பிரஹ்லாதன் ஸமாதியோகத்தில் பகவானைத்தியானித்துக்கொண்டிருந்ததால் ஒன்றையுமறியவில்லை. ஈசனருளால் பர்வதமும் கப்பல்போல் மிதந்து அவனை நசுக்கவில்லை. ஸமுத்திராஜனும் மானிடஉருவங்கொண்டு பிரஹ்லாதனுக்குப் பூஜைசெய்தான்; இச்சந்தர்ப்பத்தில் துதிக்கப்பட்ட பகவான் லக்ஷ்மியுடன் உல்லாஸமாயிருந்தபோதிலும் உடனேகருடனேறி வெகு வேகமாய் வந்தார்.

अतिवेगपरिश्रान्तं खगेन्द्रं पाययन्सुधाम् ।

அதிகவேகமாய் வரும்போது சிரமமடைந்த கருடனுக்கு தனது வலதுகையினால் அமிருதத்தை ஊட்டிக்கொண்டேவந்தார். பிரஹ்லாதனும் பலவிதமாகத் துதித்தான். கடைசியில் பகவான், "குழந்தாய் பிரஹ்லாதா! பயப்படாதே நாளையதினம் உன் தந்தையை நான் ஸம்ஹாரம் செய்து விடுகிறேன். நான் இதே ரூபத்தோடு இப்பர்வதத்தில் ஒரு கல்பகாலம் வரையில் இருக்கிறேன். இந்தப் பர்வதத்திற்கு ஸிம்ஹாசலம் என்ற பெயரும் வழங்கப்போகிறது. என்றுகூறி அந்தர்த்தானமடைந்தார். இவ்விதம பகவானின் கட்டளையால் ஸிம்ஹாசலம் என்ற நாமம் ஏற்பட்டது.

ஷை ஸிம்ஹாசலத்தில் வீற்றிருக்கும் வாராஹநரஸிம்மரின் பிம்பதரிசனம் அக்ஷய்யதிருதீயை தினம் மாத்திரம்தான் ஏற்படும். இதரகாலங்களில் சந்தனகாஷ்டத்தினால் மூடப்பட்டிருக்கும், என்ற ஆகாயவாணியும் அப்போது உண்டாயிற்று.

21-ம் அத்தியாயம்:— பகவான் முப்பத்திரண்டு லக்ஷணங்களைப் படைத்தவர் என்பதை ரூபிக்க முப்பத்திரண்டு நரஸிம்ம ரூபங்களைத் தாரணம் செய்திருக்கிறார். அவையாவன:—

1. குந்தபாத நரஸிம்மர் 2. கோபஸிம்ஹர் 3. திவ்யஸிம்ஹர் 4. பிரம்மாண்டநரஸிம்மர் 5. ஸமுத்திர நரஸிம்மர் 6 விசுவரூபநரஸிம்மர் 7. வீரஸிம்ஹர் 8. க்ரூரஸிம்ஹர் 9. பீபத்ஸ 10. ரௌத்ரஸிம்ஹர் 11. தூம்ரஸிம்ஹர் 12. அகநிஸிம்ஹர் 13 வியாக்ரஸிம்ஹர் 14. பிடாலஸிம்ஹர் (பூனையின் உருவம்) 15. பீமஸிம்ஹர் 16. பாதாளஸிம்ஹர் 17. ஆகாசநரஸிம்மர் 18. வக்ரஸிம்ஹர் 19. சக்ரஸிம்ஹர் 20. சங்கஸிம்ஹர் 21. ஸத்வஸிம்ஹர் 22. அற்புத நரஸிம்மர் 23. வேகஸிம்ஹர் 24. விதாரணஸிம்ஹர் 25. கோரஸிம்ஹர் 26. ஸித்தஸிம்ஹர் 27. சாந்தஸிம்ஹர் 28. யோகாநந்த நா

ஸிம்மர் 29. லக்ஷ்மீநாஸிம்மர் 30. பத்ரநரஸிம்மர் 31. ராஜஸிம்ஹர் 32. வராஹநரஸிம்மர். இவ்வாறுன நரஸிம்மரூபங்களை நாம் ஸ்மரித்தமாத்திரத்தினாலேயே பூதப்பிரேத பிசாசம் முதலியவைகளினால் யாதொரு பீடையும் ஏற்படாது.

பிரஸித்த நாஸிம்மரூபங்களைத்தவிர மற்றவைகள் எந்தெந்த க்ஷேத்திரங்களில் விற்றிருக்கின்றன என்பது ஸ்பஷ்டமாக அறியப்படவில்லை.

सत्यं विधातुं निजभृत्यभाषितं व्याप्तिञ्च भूतेष्वखिलेषु चात्मनः ।
अदृश्यतात्यद्भुतरूपमुद्वहन् स्तम्भे सभायां न मृगं न मानुषम् ॥

முடிவில், ஹிரண்யகசிபுவுக்கு வரதானமளித்த தன் ஊழியனான பிரஹ்மாவின் வாக்கை உண்மையாக்கவும், ஹிரண்யன் பிரஹ்லாதனைப்பார்த்து "உன்னைக்காப்பாற்றும் ஈசுவரனென்பான் எங்கு இருக்கிறான்?" என்று கேட்டபோது, "தூணிலும் இருப்பான், துரும்பிலும் இருப்பான் உன்னிடமும் இருப்பான் என்னிடமும் இருப்பான்" என்ற பிரஹ்லாதனின் வார்த்தையை உண்மையாக்கவும், "என்னாலேயே நீங்கள் மூன்று ஜன்மங்களிலும் கொல்லப்படுவீர்கள்" என்று துவாரபாலகர்களிடம்கூறின தான்வாக்யத்தை உண்மையாக்கவும், "பகவான் சுக்லசோணித ஸம்பந்தத்தினால் பிறப்பவரல்ல" என்று கூறும் ஞானிகளின் வாக்யத்தை உண்மையாக்கவும், பிரபுவானவர் மிருகத்திற்கும் மனிதனுக்கும் மாறுபாடான நரஸிம்மரூபத்தைத் தரித்துத் தூணிலிருந்து வெளிக்கிளம்பி துஷ்டனான ஹிரண்யனை நிக்ரஹம்செய்து சிஷ்டனான பிரஹ்லாதனைப் பரிபாலனம் செய்தார்.

இதனால் எல்லா ஸஜ்ஜனர்களும் ஸன்மார்க்கத்திலேயே நடந்து ஈசுவரனிடம் பக்தியைச் செய்துகொண்டே வந்தால் அவர்களுக்கு நேரும் ஆபத்துக்கள் யாவும் முற்றிலும் தீர்ந்து அவர்களும் ஈசுவராநுக்கிரஹத்திற்குப் பாத்திரர்களாவார்கள் என்று புலப்படுகிறது. ஆகையால் கூடுமான வரையில் பிரஹ்லாதனைப் பின்பற்றி அவனுடைய உபதேசங்களை ஒழுகுவதற்குமுயலவேண்டும் என்று அனைவரும் பிரார்த்திக்கப்படுகின்றனர். சுபம்!

ஸ்ரீமாத்வஸபா, கும்பகோணம். — எம். ராமராவ், காரியதரிசி.

எந்த தேவனாகவிருந்தான்? யாருடைய சாபத்தால் அஸுரனா னான்? அச்சாபம் பிறக்கக் காரணம் யாது? சாபத்திற்கு ஆளாகி யும் பகவத்பக்தி மாத்திரம் அவனிடம் எப்படிக்குடிகொண்டி ருந்தது? என்ற பல வினாக்களுக்கு விடைகளைப் பகரவேண்டிய தவசியமாயிற்று. ஆதலின் அடியிற்கண்டவாறு ஷை வினாக்களு க்கு விடைகளை யளிப்போம்.

ஸ்ரீமத் பாகவதம் ஸப்தமஸ்கந்தத்தில் பிரஹ்லாத சரித்திரம் அதிவிஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருப்பினும் அவன் பூர்வஜன்ம விருத்தாந்தங்கள் அங்கு கூறப்படவில்லை, ஏனெனின். ஸ்கா ந்த புராணத்தின் ஓர்பாகமாகிய ஸிம்ஹாசலமஹாத்மியத் தில்ஷை விஷயங்கள்யாவும் கூறப்பட்டிருப்பதனால்தான், அவ்வி பரம் பின்வருமாறு.

ஸிம்ஹாசல மாகாத்மியம் எட்டாம் அத்தியாயம்:—

ஹிரண்யகசிபுவின் உபத்திரவங்களைச் சகியாத பிரஹ்மா முத லிய தேவர்கள் அஸுரசத்ருவான விஷ்ணுவிடம் முறையிடுவ தற்கு வைகுண்டமடைந்தனர். அங்கு வாயிற்காப்போனாகவிரு ந்த ஸுமுகன் அத்தேவர்களைப்பார்த்து "யோகிகளினால் அடை யத்தகுந்த பகவானின் ஸ்தானத்தை கர்மாதிகாரிகளான நீங்கள் அடையத்தகுந்தவர்களல்ல. வந்த காரியத்தைத் தெரிவித்தால் நானே பகவானிடம் தெரிவிக்கிறேன்" என்று தடை செய்தான். மிகவும் துக்கமுற்ற தேவர்களும் அப்படியே செய்ய, துவாரபால கனால் அறிவிக்கப்பட்ட பகவானும் முன்தோன்றி தேவர்கள் வந்த காரணத்தை வினவினார்.

பத்தாம் அத்தியாயம்:— "பகவன்! ஹிரண்யகசிபுவால் நாங்கள் மிகவும பீடிக்கப்படுகிறோம். அதை இச்சந்நிதானத் தில் தெரிவிக்க வந்தவர்களை இத்துவாரபாலகன் உள்ளே போக முடியாமல் தடுத்துவிட்டான். இந்த இடத்தில் இது வரையில் இப்பேர்ப்பட்டதடை ஏற்பட்டதுமில்லை, நாங்களும் இப்பேர்ப் பட்ட துக்கத்தை அநுபவித்தது மில்லை." என்று தேவர்கள் கூறினார்கள். கிருபா சமுத்திரரான கடவுள் "நீங்கள் போய்

வரலாம். நாம் கூடிய சிக்கிரமே புவியில் அவதரித்து லோக கண்டகனுன அவ்வரக்கனைச் சம்கரிப்போம், உங்களைத் தடுத்த ஸுமுகனே அவன் சம்ஹாரத்திற்குக் காரணமாவான்,'' என அருள் புரிந்தனர். அவர்கள் சென்றவுடன் ஸுமுகனைப்பகவான் கூப்பிட்டு "துர்ப்புத்திபடைத்தவனே! நீ தேவர்களைத் தடுத்த படியால் அஸுரயோனியையடைந்து அதே ஹிரண்யகசிபுவுக்குப் புத்திரனுகக்கடவாய்'' என்று கட்டளையிட்டனர்.

பதிஞேரும் அத்தியாயம்:—இவ்வாறு சபிக்கப்பட்ட ஸுமுகன் அஞ்ஜலிபந்தஞ்செய்து விக்ஞாபித்துக் கொண்டதாவது "ஈசா! தங்களுக்கு வாயிற்காப்போனுகவிருந்து நான் அஸுரனுகப்பிறப்பதா? யான் செய்த தவறை க்ஷமிக்கக்கடவீர்.'' என்று. பகவானே "குழந்தாய்! பயப்படாதே. ஒரு ரகஸ்யத்தைச்சொல்லுகிறேன் கேள். உலகில் என்னிடம் பக்திபுரிய ஜாதி காரணமாகாது. நீ அஸுரனுக்குப் புத்திரனுயினும் என்திவ்யநாமங்களை ஸதாஜபித்துக்கொண்டும் என் திவ்யரூபங்களைத்தியானம் செய்து கொண்டும்இருந்துகடைசியில் என் துவாரபாலகனுவாய்'' என்ருர்.

பன்னிரண்டாவது அத்தியாயம்:—பிறகு ஸுமுகன் ஹிரண்யகசிபுவின் புத்திரனுகப்பிறந்தான். தைத்ய புரோஹிதர்களும் எல்லாரையும் சந்தோஷிக்கச்செய்யும் அக்குமாரனுக்கு பிரஹ்லாதன் என நாமகரணம் செய்தனர். இதனுல் பிரஹ்லாதன் பூர்வம் விஷ்ணுலோகத்தில் ஸுமுகன் எனப்பெயர்கொண்ட துவாரபாலகனுக விருந்தானென்றும்மகாவிஷ்ணுவின் சாபவசத்தினுல்அஸுரனுனன் என்றும் அச்சாபம், பிரஹ்மாதி தேவர்களைத்தடுத்தபடியால் ஏற்பட்டது என்றும் மீண்டும் ஸுமுகனுல் பிரார்த்திக்கப்பட்ட பகவான், அவன், அஸுரனுய்ப்பிறந்தாலும் அவனிடம் பகவத்பக்தி பூர்ணமாயிருக்கும் என்று அநுக்ரஹம் செய்தபடியால் அவன் பரமபாகவதனுனன் என்றும் தெரியவருகிறது.

பதினெட்டாம் அத்தியாயம்:—ஸிம்ஹாசலம் என்னும் க்ஷேத்திரம் விசாகப்பட்டணத்திற்கு அருகில் ஜகந்நாதத்திற்குப்போகும் வழியில் உளது. அங்கு வராஹநரஸிம்மஸ்வாமி, கோயில் கொண்டிருக்கிருர். ஸிம்ஹாசலம் என்று பெயர்வரக் காரணமென்ன? ஒருநாள் ஹிரண்யகசிபு பிரஹ்லாதனை ஸமுத்திரத்தில் தள்ளி அவன்மேல் பெரிய பர்வதத்தைப் போடும்படி ஏவினுன்.

அவ்வாறு தள்ளப்பட்ட பிரஹ்லாதன் ஸமாதியோகத்தில் பகவானைத்தியானித்துக்கொண்டிருந்ததால் ஒன்றையுமறியவில்லை. ஈசனருளால் பர்வதமும் கப்பல்போல் மிதந்து அவனை நசுக்கவில்லை. ஸமுத்திரராஜனும் மானிடஉருவங்கொண்டு பிரஹ்லாதனுக்குப் பூஜைசெய்தான்; இச்சந்தர்ப்பத்தில் துதிக்கப்பட்ட பகவான் லக்ஷ்மியுடன் உல்லாஸமாயிருந்தபோதிலும் உடனேகருடனேறி வெகு வேகமாய் வந்தார்.

अतिवेगपरिश्रान्तं खगेन्द्रं पाययन्सुधाम् ।

அதிகவேகமாய் வரும்போது சிரமமடைந்த கருடனுக்கு தனது வலதுகையினுல் அமிருதத்தை ஊட்டிக்கொண்டேவந்தார். பிரஹ்லாதனும் பலவிதமாகத் துதித்தான். கடைசியில் பகவான், "குழந்தாய் பிரஹ்லாதா! பயப்படாதே நாளையதினம் உன் தந்தையை நான் ஸம்ஹாரம் செய்து விடுகிறேன். நான் இதே ரூபத்தோடு இப்பர்வதத்தில் ஒரு கல்பகாலம் வரையில் இருக்கிறேன. இந்தப் பர்வதத்திற்கு ஸிம்ஹாசலம் என்ற பெயரும் வழங்கப்போகிறது. என்றுகூறி அந்தர்த்தானமடைந்தார். இவ்விதம பகவானின் கட்டளையால் ஸிம்ஹாசலம் என்ற நாமம் ஏற்பட்டது.

ஷை ஸிம்ஹாசலத்தில் வீற்றிருக்கும் வாராஹநரஸிம்மரின் பிம்பதரிசனம் அக்ஷய்யதிருதீயை தினம் மாத்திரம்தான் ஏற்படும். இதரகாலங்களில் சந்தனகாஷ்டத்தினுல் மூடப்பட்டிருக்கும், என்ற ஆகாயவாணியும் அப்போது உண்டாயிற்று.

21-ம் அத்தியாயம்:— பகவான் முப்பத்திரண்டு லக்ஷணங்களைப் படைத்தவர் என்பதை ரூபிக்க முப்பத்திரண்டு நரஸிம்மரூபங்களைத் தாரணம் செய்திருககிறார். அவையாவன:—

1. குந்தபாத நரஸிம்மர் 2. கோபஸிம்ஹர் 3. திவ்யஸிம்ஹர் 4. பிரம்மாண்டநரஸிம்மர் 5. ஸமுத்திர நரஸிம்மர் 6 விசுவரூபநரஸிம்மர் 7. வீரஸிம்ஹர் 8. குரூரஸிம்ஹர் 9. பீபத்ஸ—10. ரௌத்ரஸிம்ஹர் 11. தூம்ரஸிம்ஹர் 12. அகநிஸிம்ஹர் 13 வியாக்ரஸிம்ஹர் 14. பிடாலஸிம்ஹர் (பூனையின் உருவம்) 15. பீமஸிம்ஹர் 16. பாதாளஸிம்ஹர் 17. ஆகாசநரஸிம்மர் 18. வக்ரஸிம்ஹர் 19. சக்ரஸிம்ஹர் 20. சங்கஸிம்ஹர் 21. ஸத்வஸிம்ஹர் 22. அற்புத நரஸிம்மர் 23. வேகஸிம்ஹர் 24. விதாரணஸிம்ஹர் 25. கோரஸிம்ஹர் 26. ஸித்தஸிம்ஹர் 27. சாந்தஸிம்ஹர் 28. யோகாநந்த நர

ஸிம்மர் 29. லக்ஷ்மீநாஸிம்மர் 30. பத்ரநாஸிம்மர் 31. ராஜஸிம்ஹர் 32. வாாஹநாஸிம்மர். இவ்வாருன நாஸிம்மரூபங்களை நாம் ஸ்மரித்தமாத்திரத்திஞலேயே பூதப்பிரேத பிசாசம் முதலியவைகளிஞல் யாதொரு பீடையும் ஏற்படாது.

பிரஸித்த நாஸிம்மரூபங்களைத்தவிர மற்றவைகள் எந்தெந்த க்ஷேத்திரங்களில் வீற்றிருக்கின்றன என்பது ஸ்பஷ்டமாக அறியப்படவில்லை.

**सत्यं विधातुं निजभृत्यभाषितं व्याप्तिञ्च भूतेष्वखिलेषु चात्मनः ।**
**अदृश्यतात्यद्भुतरूपमुद्वहन् स्तम्भे सभायां न मृगं न मानुषम् ॥**

முடிவில், ஹிரண்யகசிபுவுக்கு வாதானமளித்த தன் ஊழியஞன பிரஹ்மாவின் வாக்கை உண்மையாக்கவும், ஹிரண்யன் பிரஹ்லாதனைப்பார்த்து "உன்னைக்காப்பாற்றும் ஈசுவானென்பான் எங்கு இருக்கிறுன்?" என்று கேட்டபோது, "தூணிலும் இருப்பான். துரும்பிலும் இருப்பான் உன்னிடமும் இருப்பான் என்னிடமும் இருப்பான்" என்ற பிரஹ்லாதனின் வார்த்தையை உண்மையாக்கவும், "என்ஞலேயே நீங்கள் மூன்று ஜன்மங்களிலும் கொல்லப்படுவீர்கள்" என்று துவாரபாலகர்களிடம்கூறின தான்வாக்யத்தை உண்மையாக்கவும், "பகவான் சுக்லசோணித ஸம்பந்தத்திஞல் பிறப்பவரல்ல" என்று கூறும் ஞானிகளின் வாக்யத்தை உண்மையாக்கவும், பிரபுவானவர் மிருகத்திற்கும் மனிதனுக்கும் மாறுபாடான நாஸிம்மரூபத்தைத் தரித்துத் தூணிலிருந்து வெளிக்கிளம்பி துஷ்டஞன ஹிரண்யனை நிக்ரஹம்செய்து சிஷ்டஞன பிரஹ்லாதனைப் பரிபாலனம் செய்தார்.

இதஞல் எல்லா ஸஜ்ஜனர்களும் ஸன்மார்க்கத்திலேயே நடந்து ஈசுவானிடம் பக்தியைச் செய்துகொண்டே வந்தால் அவர்களுக்கு நேரும் ஆபத்துக்கள் யாவும் முற்றிலும் தீர்ந்து அவர்களும் ஈசுவரானுக்கிரஹத்திற்குப் பாத்திரர்களாவார்கள் என்று புலப்படுகிறது. ஆகையால் கூடுமான வரையில் பிரஹ்லாதனைப் பின்பற்றி அவனுடைய உபதேசங்களை ஒழுகுவதற்குமுயலவேண்டும் என்று அனைவரும் பிரார்த்திக்கப்படுகின்றனர். சுபம்!

ஸ்ரீமாத்வஸபா, கும்பகோணம். எம். ராமராவ், காரியதரிசி.